Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 3, 2021

புதன்கிழமை 03 நவம்பர் 2021 | ஒளி: 07 கதிர்: 143 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

பசறை விபத்தில்

## பெற்றோரை இழந்த பிள்ளைகளால் மனு

■ எம். செல்வராஜா

பசறை பஸ் விபத்தில் பெற்றோரை இழந்த மூன்று பிள்ளைகள், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு, நேற்று முன்தினம் (01) தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், பாதையருகே இருந்த பாறைக்கல் அகற்றப்படாமை, பாதை குறுகியதாக இருந்ததன் காரணமாகவே விபத்து சம்பவித்துள்ளதாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை கவனயீனமாக இருந்துள்ளதாகவும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த மார்ச் 20ஆம் திகதி பசறை - லுணுகலை பிரதான வீதியின் 13ஆம் மைல் கல்லருகே இடம்பெற்ற பஸ் விபத்தில் 14 பேர் பலியானதுடன், 30 பேர் காயமடைந்திருந்தனர்.

இவ்விபத்தில் 9, 8, 4 ஆகிய வயதுகளையுடைய மூன்று பிள்ளைகள் பெற்றோரை இழந்த நிலையில், தமது தாத்தா, பாட்டி ஆகியோரால் தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

விபத்துக்குள்ளான பஸ்ஸை செலுத்திய சாரதியும் ஞாயிற்றுக்கிழமை (31) மாரடைப்பினால் மரணமாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை தமிழர்களுக்கு தமிழ்நாட்டில் வீடு

### எங்கு வாழ்ந்தாலும் தமிழர்களே என்கிறார் ஸ்டாலின்



"தமிழர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் ஒரு தாய் மக்கள் தான்; நாம் அனைவரும் தமிழினத்தைச் சேர்ந்தவர்கள்; கடல் தான் நம்மைப் பிரிக்கிறது. இலங்கை தமிழர்களுக்கான நலத்திட்டங்கள் மேலும் தொடரும்" என்று தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

இலங்கை தமிழர்களுக்காக ரூ.142 கோடி செலவில் வேலூர் மாவட்டம் மேல் மொணவூரில் 3,510 வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா, நேற்று (02) நடைபெற்றது. நிகழ்வில் பங்கேற்று அடிக்கல் நாட்டி வைத்த பின்னர், முதலமைச்சர் ஸ்டாலின் கருத்துத் தெரிவிக்கையில், "ஒவ்வொரு முறை திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி பொறுப்பேற்றதும் இலங்கை தமிழர்களுக்கு பல்வேறு திட்டங்களை செய்து வருகிறது. இலங்கை தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் கட்சி தி.மு.க தான். கடந்த 10 ஆண்டுகளாக அண்ணா திராவிட முன்னேற்ற கழக அரசாங்கம் இலங்கை தமிழர்களுக்காக எந்தத் திட்டங்களையும் செய்யவில்லை.

தொடர்ச்சி P2

எவரையும் தோற்கடிக்க

## மொட்டு உருவாக்கப்படவில்லை நிதியமைச்சர் பஷில் தெரிவிப்பு



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவானது மக்களை வெற்றியடையச் செய்ய உருவாக்கப்பட்டதே அன்றி, எவரையும் தோற்கடிப்பதற்காக அல்ல எனத் தெரிவித்த நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷ, தேசிய மட்டத்தில் மாத்திரமல்ல சர்வதேச மட்டத்திலும் பலமடைந்துள்ளது. நண்பர்களின் ஆதரவுடனும்,

தொடர்ச்சி P2

## ஆர்ப்பாட்டம் நடக்கும்; வேலைநிறுத்தம் நடக்காது




இன்றைய தினம் வேலைநிறுத்தம் இடம்பெறாது என்றும் இலங்கை மின்சார சபைக்கு முன்பாக அனைத்து மின்சார சபை ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்த இலங்கை மின்சார சபையின் ஐக்கிய தொழிற்சங்கக்

தொடர்ச்சி P2

கொரோனாவால் பிந்திய

## பரீட்சைகளுக்கான தினங்கள் அறிவிப்பு



கொரோனா தொற்று காரணமாக பிற்போடப்பட்டிருந்த, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும்

தொடர்ச்சி P2

பாரிய ஆபத்தைக் கொண்டிருக்கும்

# பிரிவினை செயலணியை திட்டவட்டமாக நிராகரிப்போம்

## ▌யாழில் கூடிய தமிழ்க் கட்சிகள் தீர்மானம்

## ▌சகல கட்சிகளும் சங்கமிக்கும் சந்திப்பு 2 வாரங்களில்



■ எஸ்.நிதர்ஷன்

ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற கோட்பாட்டை முன்னெடுப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமாக அமைக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி செயலணி, மக்களுக்கிடையில் ஒற்றுமையின்மையையும், பிரிவினையையும் ஏற்படுத்தக்கூடிய பாரிய ஆபத்தைக் கொண்டிருப்பதால், அதனை திட்டவட்டமாக நிராகரிப்பது என, தமிழ் பேசும் கட்சிகள் தீர்மானித்தன.

தொடர்ச்சி P2



## பங்காளிகளும் கலந்துகொண்டனர்...

நேற்று (2) கொழும்பு தாமரைத் தடாகத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் 5ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்ட அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன ஆகியோரைப் படங்களில் காண்கிறீர்கள். (பிரதமரின் ஊடகப் பிரிவு)



## இணைத் தலைவராக இருப்பதில் இலங்கைக்கு பெருமை

"புதிய நிலக்கரி சக்தியை அகற்றுவதற்கான உலகளாவிய எரிசக்தி மாநாட்டின்" இணைத் தலைவராக இருப்பதில் இலங்கை பெருமை கொள்கிறது என, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நேற்று முன்தினம் (01) ஆரம்பமான கோப்-26 என்றழைக்கப்படும் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகின் பாரியளவில் பச்சைவீட்டு

தொடர்ச்சி P2

மாகாணத்தை விட்டு மாகாணம் செல்ல

## தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்குங்கள்



மாகாணத்தில் இருந்து மாகாணத்துக்குப் பயணிக்கும் போது, தடுப்பூசிகளின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தும் தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்க வேண்டும் என, ராகம மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன டி. சில்வா, அரசாங்கத்துக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று

## நிர்வாணமாக்கி மண்டியிட வைத்தனர்

### ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் விவரிப்பு

வீதியில் சாரதி ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில், ஏற்கெனவே இடமாற்றம் செய்யப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியால், குறித்த சாரதி, சித்திரவதை மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக குற்றஞ்சாட்டி, சட்ட நிறுவனம் ஒன்றால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



கைது செய்வதை தடுக்கக் கோரி

## சிறில் காமினி மனுத்தாக்கல்

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தன்னால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் தன்னைக் கைது செய்வதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு தடை விதிக்கக் கோரி, அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ, உயர் நீதிமன்றத்தில் நேற்று (02) அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

தொடர்ச்சி P2



கல்லடி பாலத்துக்கு அருகில்

## வேலியிட வந்தவர்கள் மக்களால் முற்றுகை

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு, கல்லடி பாலத்துக்கு அருகிலுள்ள வடிச்சல் நிலப் பகுதியை, நேற்று (02) காலை வேலியிட்டு அடைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி பிரதேச மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

கல்லடியை ஊடறுத்து கல்லடி பாலத்தை இணைக்கும் வகையில் உள்ள குறித்த வடிச்சல் பகுதியையே சிலர் நேற்று வேலியடைக்க முற்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

LK Newspapers Viber Community

PAGE 1 தொடர்ச்சிகள்

## மொட்டு உருவாக்கப்படவில்லை நிதியமைச்சர் பஷில் தெரிவிப்பு

எதிரிகளினால் ஏற்படுத்தப்பட்ட சவால்களையும் கருத்திற்கொண்டு அரசியலில் செல்வாக்கு செலுத்தி மக்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளோம் என்றார்.

நேற்று (2) தாமரைத் தடாகத்தில் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் 5ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை பொது மேடைகளில் பிரதான உரை நிகழ்த்தவில்லை. கட்சியின் 5ஆவது ஆண்டு விழாவில் பிரதான உரை ஆற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் பிரதான பலம் பொருந்திய கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன,பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவின் தலைமைத்துவத்தில் முன்னேற்றமடைந்துள்ளது என்றார்.

அரசியல் ரீதியில் எவரையும் தோற்கடிப்பதற்காக கட்சியை ஸ்தாபிக்கவில்லை.மக்களின் முன்னேற்றம்,வெற்றி ஆகியவற்றை கருத்திற் கொண்டு கட்சியை ஸ்தாபித்தோம். எமது பிரதான நோக்கம் மக்களின் முன்னேற்றத்தையும் வெற்றியையும் அடிப்படையாகக் கொண்டதாக காணப்படுகிறது.

கட்சி என்ற ரீதியில் வெறுப்பு, வைராக்கியம் ஆகியவற்றை துறந்து ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் பல சவால்கள் காணப்படுகின்றன. பின்னடைய வேண்டாம். மக்கள் வழங்கிய பொறுப்பினை நிறைவேற்ற அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அனைத்து சவால்களையும் வெற்றிக் கொண்டு பொதுஜன பெரமுன இனி வரும் காலங்களிலும் ஆட்சியமைக்கும் என அவர் தெரிவித்தார்.

## ஆர்ப்பாட்டம் நடக்கும்...

கூட்டமைப்பு அழைப்பாளர் ரஞ்சன் ஜெயலால், எனினும், பராமரிப்புச் சேவையில் இருக்கும் ஊழியர்களை தாம், கொழும்புக்கு அழைப்பதாகத் தெரிவித்தார்.

அனல்மின் நிலையங்களில் கடமையாற்றும் அத்தியாவசியப் பணியாளர்கள் மற்றும் அவசர பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுபவர்களை தமது தொழிற்சங்கம் அழைக்காது என்றும் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு முன்னர், ஆயிரம் தடவைக்கு மேல் ஆலோசித்து வருவதாகவும் இன்றைய தினத்துக்குப் பின்னர், ஒரு நாள் நிர்ணயம் செய்யப்படும்' என்றார்.

"கோட்பாட்டின் படி, மின் நிலையங்களில் நாங்கள் இல்லாமல், நிலையான மின்சாரம் வழங்க வழி இல்லை என்பதை அறிவோம்," என்று சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், 1996 இல் அனுபவித்த 72 மணித்தியால தொழிற்சங்க நடவடிக்கையை போன்று நவம்பர் 3 ஆம் திகதி தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தொழிற்சங்க கூட்டமைப்பு அண்மையில் எச்சரித்திருந்தது.

தேசிய சொத்துக்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், கெரவலப்பிட்டிய யுகதனவி மின்னிலையத்தின் 40% பங்குகளை விற்பது தொடர்பாக அமெரிக்காவை தளமாகக் கொண்ட எரிசக்தி நிறுவனமான நியூ ஃபோர்ட்ரெஸ் எனர்ஜி இன்க் உடனான ஒப்பந்தத்தை உடனடியாக நிறுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதற்குமே இந்தப் போராட்டம் நடத்தப்படவிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

## பரீட்சைகளுக்கான...

5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றை அடுத்த வருடம் நடாத்துவதற்கான திகதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஜனவரி 22 ஆம் திகதி சனிக்கிழமையும், க.பொ.த உயர்தரப் பரீட்சை பெப்ரவரி 7 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மார்ச் 5 ஆம் திகதி சனிக்கிழமை வரையும் நடைபெறவுள்ளன.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் மே மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஜூன் 1ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது.

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக 06 மாதங்களின் பின்னர், கடந்த ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்பட்டன.

மேலும், க.பொ.த சாதாரண தர மற்றும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்காக 2021 நவம்பர் மாதம் 08 ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன.

அதற்கமைய, பரீட்சைகளில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பாடசாலைகள் திறக்கபட்ட பின்னர் கல்வி நடவடிக்கைகளைப் பூரணப்படுத்துவதற்காக போதுமானளவு காலம் வழங்கப்பட வேண்டியுள்ளதாலேயே மேற்கண்ட தினங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறில் காமினி மனுத்தாக்கல்

2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற இணையத்தள மாநாட்டில் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ, 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் விசாரிக்குமாறு, அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் கடந்த மாதம் முறைப்பாடு செய்திருந்தார். இதனையடுத்தே சிறில் காமினியால் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி லலித திஸாநாயக்க, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ரொஹான் பிரேமரத்ன, பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ. திலகரத்ன, பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, தேசிய புலனாய்வு சேவையின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுரேஷ் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அறிக்கை தொடர்பில் தன்னைக் கைது செய்யப்படுவதற்கு தயாராகி வருவதாகவும் அதனால் தனது அடிப்படை உரிமைகள் மீறப்படும் எனவும் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாம் கைது செய்யப்படுவதை தடுக்கும் வகையில் பிரதிவாதிகளுக்கு எதிராக இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டுமெனவும் மனுவில் கோரியுள்ளார்.

## இலங்கை தமிழர்களுக்கு தமிழ்நாட்டில் வீடு

இலங்கை தமிழர் நல வாழ்வு திட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முகாம்களில் உள்ள இலங்கை தமிழ் மாணவர்களின் கல்வி கட்டணத்தை அரசாங்கமே ஏற்கும். தமிழர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் ஒரு தாய் மக்கள் தான்; நாம் அனைவரும் தமிழினத்தை சேர்ந்தவர்கள். கடல் தான் நம்மை பிரிக்கிறது. இலங்கை தமிழர்களுக்கான நலத்திட்டங்கள் மேலும் தொடரும். இலங்கை தமிழர்கள் ஆதரவற்றவர்கள் அல்ல. தி.மு.க அரசாங்கம் இலங்கை தமிழர்களுக்கு என்றைக்கும் துணை நிற்கும். என்னை உங்களின் உடன்பிறப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றார்.

# பிரிவினை செயலணியை திட்டவட்டமாக நிராகரிப்போம்

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் தமிழ் பேசும் கட்சிகளிடையே, நேற்றையதினம் (02) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும், எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகளும் கலந்து கொள்ளக்கூடிய வகையில், அடுத்த இருவாரங்களுக்குள் எமது அடுத்த சந்திப்பு நடத்தப்படுமென கட்சிகளால் தீர்மானிக்கப்பட்டது.

கலந்துரையாடலில் இடம்பெற்றதாவது, தமிழ் பேசும் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்துவரும் அரசியல் தீர்வு என்பது அவர்களின் அரசியல் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தக்கூடிய முறையிலேயே அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தும் அதேவேளை, எமது மக்கள் தொடர்ந்து சந்தித்துக் கொண்டிருக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு பின்வரும் தீர்மானங்கள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, இந்த நாட்டின் அரசியல் சாசனத்தில் காணப்படும் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் விரைவாக நடத்தப்பட வேண்டும், அரசாங்கத்தினாலும் அரசாங்க ஆதரவுடனும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட காணி அபகரிப்பு நடவடிக்கைகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு, அதன் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். பல்லின, பல்மொழி, பல்மத மக்கள் வாழும் இந்த நாட்டில் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாட்டை முன்னெடுப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமாக அமைக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி செயலணி மக்களுக்கிடையில் ஒற்றுமையின்மையையும், பிரிவினையையும் ஏற்படுத்தக்கூடிய பாரிய ஆபத்தைக் கொண்டிருப்பதால் அதனை திட்டவட்டமாக நிராகரிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் என். ஸ்ரீகாந்தா, தமிழ் மக்கள் கூட்டணியின் பொருளாளர் வி.பி.சிவநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவை கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்குங்கள்

ஹோட்டல்கள் மற்றும் நெரிசலான இடங்களுக்குச் செல்லும் நபர்களின் தடுப்பூசி அட்டைகளை கட்டாயம் சரிபார்த்து, அவர்கள் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனரா என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும்

உலகெங்கிலும் உள்ள பல நாடுகள், இந்த வழிமுறையை செயற்படுத்தி வெற்றிகரமான முடிவுகளை எட்டியுள்ளன என்றார்.

இவ்வாறானதொரு வேலைத்திட்டத்தை மேற்கொள்வதன் மூலம், மாகாணத்திலிருந்து மாகாணத்துக்கு தொற்று பரவுவதைக் கணிசமாகக் கட்டுப்படுத்த முடியும் என்றும், குறிப்பாக இளைய தலைமுறையினர் தடுப்பூசி போடுவதற்கு இது உத்வேகத்தை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டார்.

அதேவேளை, கொரோனா வைரஸின் புதிய திரிபுகள் நாட்டில் தொடர்ந்து வெளிப்படும் என்று கூறிய பேராசிரியர், தடுப்பூசி மற்றும் அடிப்படை சுகாதார விதிகளை தொடர்ந்து பின்பற்றுவதே புதிய திரிபுகளிலிருந்து விடுபட ஒரே வழி என்று சுட்டிக்காட்டினார்.

## நிர்வாணமாக்கி மண்டியிட வைத்தனர்

வீதியிலும், பொலிஸ் நிலையத்திலும் நடந்த சம்பவத்தின் அதிர்ச்சித் தகவல்களை பிரபல சட்ட நிறுவனமொன்று ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் வெளிப்படுத்தியுள்ளது.

சாரதி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளான நீலகண்டன் மற்றும் நீலகண்டன் ஆகியோர், சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமது கட்சிக்காரர் கோருவதாக ஜனாதிபதிக்கு விரிவான கடிதம் எழுதியுள்ளனர்.

சப்ரகமுவ மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரன்மல் கொடிதுவக்கு சாரதியை வீதியில் தாக்கியமை, சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட காணொளி காட்சிகளில் வெளியாகியதையடுத்து, இடம்மாற்றம் செய்யப்பட்டார்.

எவ்வாறாயினும், கிரியெல்ல பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட தமது கட்சிக்காரர், அறைக்குள், நிர்வாணமாக்கப்பட்டு மண்டியிடும்படி கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் அப்போது இரண்டு அதிகாரிகள் முன்னிலையில் சாரதியை சிரேஷ்ட டிஐஜி தாக்கியதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது கட்சிக்காரர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், நிர்வாணமாக புகைப்படம் எடுக்கப்பட்டதாகவும் வழக்கறிஞர், தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இணைத் தலைவராக இருப்பதில் இலங்கைக்கு பெருமை

வாயுக்களை வெளியிடுபவர்கள், தங்கள் தேசிய கடமைகளை நிறைவேற்றுவது போன்றே, காலநிலை நெருக்கடியை சமாளிப்பதற்கான உதவிகளை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு வழங்குவது அவசியம் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

பொதுச் சுகாதாரப் பிரச்சினைகள், நீர் மாசடைதல், மண்ணரிப்பு மற்றும் உயிர்ப் பன்முகத்தன்மை பாதிப்புகள் காரணமாக, இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அண்மையில் தடை விதித்தது.

பல்வேறு குழுக்கள் இதனை எதிர்த்தாலும், எதிர்காலத்தில் ஆரோக்கியமான மற்றும் மிகவும் நிலையான சேதன விவசாயத்துக்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று தெரிவித்த ஜனாதிபதி, இதன் மூலம் புத்தாக்கம் மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

காலநிலை மாற்றங்களானவை, அனைத்து நாடுகளையும் பாதித்திருக்கின்றன. ஆனாலும், அவை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளையே அதிகளவில் பாதித்திருக்கின்றன. காலநிலை மாற்றத்தின் மூலம் ஏற்படும் அழிவைக் குறைப்பதற்கும் மாற்றியமைப்பதற்கும் துணிச்சலாக நடவடிக்கை எடுத்துவரும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு உதவுவது அவசியமாகும் என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இலங்கையின் கொள்கையானது, 2050ஆம் வருடம் ஆகும்போது காபன் உதாசீனத்தை அடைவதற்காக, காபன் உமிழ்வைக் குறைக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் பங்களிப்புடன், 2030ஆம் ஆண்டளவில் தேசிய எரிசக்தி தேவையில் 70 சதவீதம் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்ப்பதோடு, படிம எரிபொருட்களின் பயன்பாட்டைப் படிப்படியாக நிறுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பொதுநலவாய அமைப்பின் பசுமை சாசனத்தின் கீழ், சதுப்புநில சூழல் கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரப் பணிக்குழுவுக்கும் இலங்கை தலைமை தாங்குகிறது. இலங்கை தனது நிலையான முயற்சிகளுக்காக முதலீடுகள், தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான நிதி உதவிகளைப் போன்று, கொவிட் - 19 தொற்றுப் பரவல் மீட்புக்கான விரிவான உதவிகளையும் வரவேற்கிறது என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ குறிப்பிட்டார்.

## வேலியிட வந்தவர்கள் மக்களால் முற்றுகை

அப்பகுதியில் உள்ள கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பிரதேச கிராம சேவையாளர் உட்பட கிராம மக்கள் அப்பகுதிக்கு விரைந்து, அதைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். இதன்போது, அங்குவந்த பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யப்படும் என பொதுமக்களிடம் தெரிவித்தார்.

சில காலங்களாக போலி உறுதிகளைக்கொண்டு குறித்த பகுதியை அபகரிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தாம் அதனைத் தடுத்து நிறுத்தி வருவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வடிச்சல் பகுதி ஊடாகவே மழைகாலங்களில் நொச்சமுனை தொடக்கம் கல்லடி வரையான பகுதிகளில் உள்வரும் வெள்ள நீர்கள் வடிந்து, கல்லடி வாவியில் கலப்பதாகவும் அப்பகுதியை அடைத்தால் அப்பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கும் எனவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே, குறித்த பகுதியை பாதுகாப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் உரிய அதிகாரிகளும் விரைவாக நடவடிக்கையெடுக்கவேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அந்தச் சம்பவம் காரணமாக, கல்லடி பாலம் பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டதுடன், போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

LK Newspapers Viber Community




# அமைச்சரவை தீரமானங்கள்

**01 ஒப்பந்தம்**

பக்ரீரியாவால் பரவும் மெலியோயிடோசிஸ் எனும் நோய் தொடர்பில் முன்மொழியப்பட்ட ஆராய்ச்சிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவின் டியூக் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் உபவழங்கல் ஒப்பந்தம் மற்றும் பொருட்கள் பரிமாற்ற ஒப்பந்தமொன்றையும் மேற்கொள்வதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**02.கடன் சலுகை முறையொன்றை நடைமுறைப்படுத்தல்**

வனமி இறால் வளர்ப்பாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் தேவையான மூலதனங்களை வழங்குவதற்காக அரச வங்கிகள் மூலம் சலுகை ரீதியான கடன் முறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக கடற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**03.பொதுவான கொள்கை வழிகாட்டி**

மின்சக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கமைய 2009 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மின்சக்தி சட்டத்தின் 5 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ள 'மின்னுற்பத்தி தொழிற்துறைக்கான பொதுவான கொள்கை வழிகாட்டி' இற்காகவும், குறித்த வழிகாட்டியை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காகவும் அமைச்சரவை அங்கரிரம் வழங்கியுள்ளது.

**04.மஹிந்தவின் யோசனைக்கு அனுமதி**

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் 6.32 பேர்ச்சர்ஸ் காணியில் கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக காணித்துண்டை 'இன்டநெஷனல் கன்ஸ்ரக்சன் கொன்சோட்டியம் (தனியார்) கம்பனி' இற்கு நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**05.கட்டடங்களை பயனுள்ள விடயங்களுக்குப் பயன்படுத்துதல்**

அரச - தனியார் பங்குடமை முதலீட்டுக் கருத்திட்டங்களுக்காக பொருத்தமான களஞ்சியங்கள், கட்டடங்கள் வளாகங்களை விருப்புத் தெரிவிப்புகளைக் கோருவதன் மூலம் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**06.அரச நிறுவனங்களின் நேரடி சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்**

'நீர்ப்பாசன செழுமை' வேலைத்திட்டத்தின் கீழ் கட்டுமானங்களை மேற்கொள்ளும் போது 50 மில்லியன் ரூபாய்கள் வரையான ஒப்பந்தங்களை இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், அரச அபிவிருத்திகள் மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம், தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவனம், மத்திய பொறியியலாளர் சேவைகள் கம்பனி, மகாவலி ஆலோசனை சேவைப் பணியகம் மற்றும் மகநெகும போன்ற பகுதியளவு அரச நிறுவனங்களுக்கு நேரடி ஒப்பந்தங்களை ஒப்படைக்கும் பொறிமுறைகளைப் பின்பற்றி ஒப்பந்தங்களை வழங்குவதற்காக நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**07. எப்பாவெல, கிரிபாவ நீர்வழங்கல் கருத்திட்டம்**

எப்பாவெல கிரிபாவ நீர்வழங்கல் முன்மொழிவுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 162.66 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான ஒப்பந்தத்தை M/s LR Group of Israel kw;Wk; SBI International Holding AG of Switzerland – JV இற்கு வழங்குவதற்காக நீர்வழங்கல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**08.பசிலின் யோசனைக்கு அனுமதி**

1969 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 2021 ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் அங்கிகாரத்திற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**09.பரீட்சைகளை நடத்துவதற்கான நேரஅட்டவணை**

பரீட்சைகளில் தோற்றுவதற்காகவுள்ள மாணவர்களுக்கு பாடசாலைகள் திறக்கப்பட்ட பின்னர் கல்வி நடவடிக்கைகளை பூரணப்படுத்துவதற்காக போதுமானளவு காலம் வழங்கப்பட வேண்டியுள்ளது. இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு 2021 ஆம் ஆண்டில் குறித்த பரீட்சைகளை நடத்துவதற்கான திருத்தப்பட்ட நேர அட்டவணைகள் கல்வி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த நேர அட்டவணைகளுக்கு அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

**ஆணைக்குழுக்கள் பற்றிக் கதைப்பதில்லை**

# ஞானசார தேரர், துமிந்த சில்வாவுக்கே முன்னுரிமை

ஞானசார, துமிந்த சில்வா போன்றவர்களுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் கூட, அரசசேவை இலஞ்ச ஊழல், பொதுப் பயன்பாடுகள் அரசகரும மொழிகள் எல்லை நிர்ணயம் போன்ற ஆணைக்குழுக்கள் பற்றி கதைப்பதில்லை. இவ்வாறு மத்திய மாகாண முன்னாள் ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மத்திய மாகாண முன்னாள் ஆளுநர்;

"வீட்டில் வளர்க்கப்படும் மாட்டின் முதுகில் சூடு குத்தப்பட்டு அதனை நடமாடவிட்டதன் பின்னர், எவரும் அதனை கண்டு கொள்வதில்லை. அது சுதந்திரமாக நடமாடித் திரியும். நமது தோட்டத்துக்குள் நுழைந்து பயிர்களை மேய்ந்தமைக்காக அதற்கு எதிராக எவரும் பொலிஸில் முறைப்பாடு செய்வதுமில்லை. அது இறந்தாலும் எவரும் அதற்காக கவலைப்படுவதுமில்லை.

20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் கைவிடப்பட்ட முதுகில் சூடு குத்தப்பட்ட மாட்டை போன்றதாகும். குறைந்தபட்சம் தேர்தலில் அதிகாரத்தை கைப்பற்ற எதிர்பார்க்கும் அரசியல் கட்சியொன்று கூட, இப்போது அரசசேவை இலஞ்ச ஊழல், பொதுப் பயன்பாடுகள் அரசகரும மொழிகள் எல்லை நிர்ணயம்



போன்ற ஆணைக்குழுக்கள் பற்றி கதைப்பதில்லை. ஞானசாரர், துமிந்த சில்வா போன்றவர்களுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் கூட இதற்கு வழங்கப்படுவதில்லை.

சிறந்த மாவட்ட செயலாளராகவும் கௌரவத்துக்குரிய சங்கப் பணிப்பாளர் நாயகமாகவும், செயலாளராகவும் பணியாற்றிய பி.எஸ்.எம். சார்ள்ஸ் வடமாகாண ஆளுநர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜீவன் தியாகராஜா தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். அரசியல் கட்சிகள் கவனம் செலுத்தாததைப் போன்று இந்த இடத்திலும் இந்த விடயத்தில் பற்றி சுதந்திரமான முறையில் கருத்துகள் அறியப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

**சீரற்ற வானிலை**

## 10 மாவட்ட 41 பிரதேச செயலக பிரிவுகளுக்குப் பாதிப்பு

நாட்டில் நிலவி வரும் சீரற்ற வானிலை காரணமாக, நாட்டின் 10 மாவட்டங்களில் 41 பிரதேச செயலக பிரிவுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இதனால், 1,444 குடும்பங்களைச் சேர்ந்த 5,790 பேர் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாகவும், வெள்ளத்தால் இருவரும், மின்னல் தாக்கத்தால் இருவரும் உயிரிழந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

03 வீடுகள் முழுமையாகவும், 409 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக தெரிவித்த அவர், எதிர்வரும் சில தினங்களில் வானிலையில் சிறிதளவு மாற்றம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.



## ஜனாதிபதி கோட்டாபயவும் பிரதமர் மோடியும் சந்திப்பு

கிளாஸ்கோ பருவநிலை மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசினார். ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் ஐநாவின் பருவநிலை மாற்றம் குறித்த மாநாடு நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்ள உலக தலைவர்கள் அனைவரும் கிளாஸ்கோ நகரில் ஒன்று கூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கொரோனா வைரஸை**

## சுகாதாரத் தரப்பால் கட்டுப்படுத்த முடியாது

கொரோனா வைரஸை, சுகாதாரத் தரப்பால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது. அது நடைமுறையில் சாத்தியப்படாது என விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத், கொரோனா வைரஸை சுகாதாரத் தரப்பால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது. அது நடைமுறையில் சாத்தியப்படாது. கொரோனா வைரஸ் பிரச்சினை என்பது சுகாதாரப் பிரச்சினை இல்லை. அது நமது பிரச்சினை. அனைவரும் இணைந்தே இதனை கட்டுப்படுத்த முடியும் எனவும் கூறினார்.

மக்கள் ஒன்று கூடுவதனூடாக கொரோனா வைரஸ் பரவும் என பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும் அனைவரும் குறிப்பாக பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவோர் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்பட்டு கொரோனா வைரஸ் பரவலை தடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



**தீபோத்ஸவ் நிகழ்வுகளில் பங்குகொள்ள**

## இலங்கையருக்கு உத்தரப் பிரதேச அரசாங்கம் அழைப்பு

உத்தரப் பிரதேசத்தின் அயோத்தியில் நவம்பர் 1 ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, தீபோத்ஸவ் நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக, இலங்கையிலிருந்து 15 பேர் கொண்ட கலாசாரக் குழு இந்தியாவின் உத்தரப் பிரதேச அரசாங்கத்தால் அழைக்கப்பட்டுள்ளது. இராமாயணத்தின் உலகளாவிய கலைக்களஞ்சியத்தின் இலங்கை பிரிவின் உறுப்பினர்களான ஞானகுமார் சிதம்பரம், காயத்திரி சுவீந்திரன் ஆகியோரும் கொழும்பிலுள்ள, சுவாமி விவேகானந்தா கலாசார மையம், நாட்டிய கலா மந்திர் ஆகியவற்றின் புகழ்பெற்ற பரத நாட்டிய குருவான கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனும் இக்குழுவுக்குத் தலைமை தாங்குகின்றனர்.

> ஞானகுமார் சிதம்பரம், காயத்திரி சுவீந்திரன் ஆகியோரும் நாட்டிய கலா மந்திர் பரத நாட்டிய குருவான கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனும் இக்குழுவுக்குத் தலைமை தாங்குகின்றனர்

இக்கலாசாரக் குழுவினரின் பயணத்துக்கு முன்னதாக இந்திய உயர் ஸ்தானிகர் ஸ்ரீ கோபால் பாக்லே, இக்குழுவினரை சந்தித்து உரையாடியிருந்தார். இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பல நூற்றாண்டுகள் பழைமையான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் இத்தகைய கலாசார மற்றும் ஆன்மீக தொடர்புகளின் முக்கியத்துவத்தை அவர் இச்சந்திப்பின்போது எடுத்துரைத்தார். மேலும் இந்தியாவில் அவர்களின் கலாசார நிகழ்ச்சிகளுக்காக வாழ்த்துகளையும் அவர் பகிர்ந்துகொண்டார்.

நுவரெலியாவில் உள்ள சீதை அம்மன் ஆலயத்திலிருந்து அனுப்பப்பட்ட ஓர் அடையாள புனித சின்னம் அயோத்தியில் உள்ள ராம ஜென்மபூமி ஆலய தலைமை குருவிடம் இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவினால் 2021 ஒக்டோபர் 28 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. இப்புனித சின்னம் இலங்கையில் உள்ள சீதை அம்மன் ஆலயத்திலிருந்து உயர்ஸ்தானிகரால் இந்தியாவிற்கு எடுத்துவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**மனுஷ நாணயக்கார எம்.பிக்கு எதிராக**

## டெலிகொம் நஷ்டஈடு கோரி வழக்கு

போலியான மற்றும் அவதூறான அறிக்கைகளை வெளியிட்டமைக்காக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவுக்கு எதிராக ஸ்ரீ லங்கா டெலிகொம் சட்டநடவடிக்கை எடுக்க நஷ்டஈடுகோரி வழக்குத் தொடர்ந்துள்ளது.

முற்றிலும் போலியான மற்றும் அவதூறான அறிக்கைகளை வெளியிட்டு SLT வர்த்தக நாமத்துக்கு சீர்செய்ய முடியாத வகையில் இழப்பை ஏற்படுத்தியமைக்காக, ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவுக்கு எதிராக, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு பில்லியன் ரூபாய் நஷ்டஈடு கோரி, நேற்றுமுன்தினம் (01.11.2021) ஸ்ரீ லங்கா ரெலிகொம் பிஎல்சி வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

2021 செப்டெம்பர் 3 ஆம் திகதி, தேசிய மருந்துப் பொருட்கள் மற்றும் ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழுவின் (NMRA) தரவுகளை சேகரித்து வைக்கும் பணியை ஸ்ரீ லங்கா டெலிகொம் மேற்கொண்டிருந்ததாக நாணயக்கார எம்.பி அறிக்கை வெளியிட்டதுடன், ஸ்ரீ லங்கா டெலிகொமின் தவிசாளர் குறுகிய உள்நோக்கங்களுக்காக NMRA இன் தரவுகளை வேண்டுமென்றே அழித்து விட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

சட்ட நடவடிக்கையின் கீழ், நாணயக்காரவால் வெளியிடப்பட்ட குறித்த அறிவித்தல்கள் நிறுவனத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலும் அவதூறாகவும் வெளியிடப்பட்டதாக சட்டரீதியான பிரகடனத்தை வெளியிடுமாறு ஸ்ரீ லங்கா டெலிகொம் நாடியுள்ளது.

குறித்த அறிக்கையை வெளியிட்டு, நிறுவனத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், சட்டத்துக்குப் புறம்பான வகையிலும், ஸ்ரீ லங்கா டெலிகொமின் உரிமைகளுக்கு எதிராகவும் நாணயக்கார செயலாற்றியுள்ளதாக ஸ்ரீ லங்கா டெலிகொம் தெரிவித்துள்ளது. மேலும் இவ்வறிக்கை உண்மைத்தன்மை, பொது மக்களின் நன்மை அல்லது வெகுமதி போன்றவற்றில் எவ்விதமான சட்டபூர்வமான அடிப்படையும் கொண்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**எவோட்ஸ்–2021**

## ஒத்திவைக்கப்பட்ட பரிசளிப்பு விழா 6ஆம் திகதி

கொழும்பில் இயங்கிவரும் புதிய அலை கலை வட்டம் இவ்வாண்டில் எவோட்ஸ் கலை, கலாசாரப் போட்டிகளை கடந்த ஜூலை மாதம் இணைய வழியாக நடத்தியது.

இதற்கான பரிசளிப்பு விழா கடந்த ஒகஸ்ட் மாதத்தில் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் கொரோனா ஏற்பட்ட முடக்கம் காரணமாக தற்போது இதனை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6.11.2021 ஆம் திகதி கொழும்பு, ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

புரவலர் புத்தகப் பூங்காவின் நிறுவனர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மூன்று பணப்பரிசில்களையும் வழங்கவுள்ளார். சிறப்பு அதிதியாக கொழும்பு-13 ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில் அறங்காவலர் கனக.ரகுநாதன் (அப்பன்) கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான ராதாமேத்தா விழா தலைமையில் நடைபெறவுள்ளது.

EK Newspapers Viber Community

கிழக்கு மாகாணத்தில்

# பரவி வரும் வயிற்றோட்டம்

## விசேட குழந்தை நல வைத்திய நிபுணர் எச்சரிக்கை

■ வி.ரி.சகாதேவராஜா



கிழக்கு மாகாணத்தின் சில இடங்களில் குறிப்பாக ஒட்டமாவடி, வாழைச்சேனை, ஏறாவூர் பகுதிகளில் இருந்து, வயிற்றோட்டம் காரணமாக அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சிறுவர்கள் மாத்திரம் இன்றி பெரியவர்களும் இதனால் பாதிக்கப்படுகின்றனர். எனவே இது தொடர்பில் அவதானம் தேவை என கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளரும் மட்டு. போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல வைத்திய நிபுணருமான டொக்டர் விஜி திருக்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இதன் அறிகுறிகளாக காய்ச்சல், வாந்தி, வயிற்றோட்டம் காணப்படும். சில சமயம் இரத்தம் கலந்த சளியுடன் வயிற்றோட்டம் காணப்படும். இது ஒருவகை பற்றீரியா தொற்றால் ஏற்படுகிறது.

"சில சமயம் வயிற்றோட்டம் இல்லாமல் அல்லது குறைவான வாந்தி, வயிற்று வலி, வயிறு ஊதுதல் போன்ற குணங்குறிகளுடனும் காணப்படலாம்.

"சிறுவர்கள், உணவு, நீர் அருந்துவது குறைவாகவும் நீர் இழப்பு அதிகமாகவும் இருப்பதால் சோர்வு, மயக்க நிலை ஏற்படும்.

"எனவே, இவ்வாறான அறிகுறிகள் ஏற்பட்டால் தாமதிக்காமல் வைத்தியசாலையை நாடுவது அவசியம்.

"மேலும், கொரோனா தொற்றின் பின்னர் சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற Miss-C எனப்படும் பல்தொகுதி அழற்சி நோய் நிலையின் போதும் காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகள் தோன்றும்.

"எனவே, உங்கள் குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு காணப்படுமாயின் விரைவாக வைத்தியசாலையை நாடுதல் சாலச்சிறந்தது" என்றார்.



மன்னாரில் கடும் மழை;

# கிராம மக்கள் திண்டாட்டம்

■ எஸ்.றொஸேரியன் லெம்பெட்



மன்னார் மாவட்டத்தில், கடந்த சில நாள்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மாவட்டத்தின் பல பாகங்களிலும் மழை நீர் சூழ்ந்து கொண்டுள்ளதோடு, மக்களின் வீடுகளிலும் நீர் புகுந்துள்ளது.

இதனால் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல்வேறு கிராமங்களிலும் இவ்வாறு மழை நீர் சூழ்ந்து கொண்டுள்ள போதும், தற்போது வரை எவ்வித இடப்பெயர்வுகளும் இடம்பெறவில்லை என மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், மன்னார் மூர் வீதி, உப்புக்குளம், பள்ளிமுனை, சாந்திபுரம், சௌத்பார், பனங்கட்டுகொட்டு, எமில் நகர் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள பல வீடுகளில் வெள்ள நிலைமை மோசமாக உள்ளது.

இதனால் குறித்த வீடுகளில் உள்ள மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில், அதிகாரிகள் யாரும் தமது பகுதிக்கு வருகை தரவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கழிவு நீர் வடிகால் மற்றும் புதிதாக கிரவல் பரவப்பட்டு அமைக்கப்பட்டு வரும் தற்காலிக வீதிகள் உரிய முறையில் செப்பனிடப்படாமையால் மழை நீரை வெளியேற்ற முடியாத நிலை காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.



புற்றுநோய் பாதிப்பு;

## மஹரகமவுக்கு செல்ல பஸ் சேவை ஆரம்பம்

■ எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள மற்றும் ஆதரவற்ற நோயாளர்களுக்காக கந்தளாய் பஸ் சாலையால் மஹரகம நம்பிக்கை வைத்தியசாலைக்கு தினமும் செல்வதற்காக புதிய பஸ் சேவையொன்று, உத்தியோகபூர்வமாக நேற்று (02) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச்சேவை, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான கபில அத்துக்கோரலவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த பஸ் சேவையானது, தினமும் நண்பகல் 12 மணிக்கு திருகோணமலை லங்கா பட்டினத்திலிருந்து சேருவில, கந்தளாய் ஊடாக கொழும்பு, மஹரகமவுக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கொழிப்பு வேலைத் திட்டம்



■ எம்.எஸ்.எம். ஹனீபா

சம்மாந்துறை பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை சம்மாந்துறை பிரதேச சபையும், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து முன்னெடுத்துள்ளன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற டெங்கு நோய் பரவுவதை தடுப்பதற்கான செயலணியின் கூட்ட தீர்மானத்துக்கமைய, சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌஷாடின் வழிகாட்டலில், இந்த டெங்கொழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன்போது, மழையுடன் கூடிய வானிலை காணப்படுவதால் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய இடங்கள், டயர்கள், யோக்கட் கப், சிரட்டைகள், மட்டைகள், பிளாஸ்டிக் கொள்கலங்கள் சேகரிக்கப்பட்டதுடன், நீர்தேங்கியுள்ள இடங்களும் துப்புரவு செய்யப்படுகின்றன.

சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட் தலைமையில் நடைபெறும் இவ்வேலைத் திட்டத்தில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல். றாசீக், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பிரதேச, சபையின் மேற்பார்வை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.







## சுகாதார ஊழியர்களுக்கு 3ஆவது தடுப்பூசி

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னிலையில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தும் பணிகள், நேற்று (02) ஆரம்பமாகின.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கண்காணிப்பில், பிராந்திய சுகாதார நிலையங்களில் இந்த மூன்றாவது தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சரவணபவன் தடுப்பூசி செலுத்திக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் உள்ளிட்டோர் தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டனர்.

(சுப்பிரமணியம் பாஸ்கரன்)

கால்நடைகளை பாதுகாக்க

## நாய்களை வெளியேற்ற தீர்மானம்

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, இரணைதீவில் நாய்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு பிரதேச சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச சபையின் உப தவிசாளர் மு.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "1992ஆம் ஆண்டு, இரணைதீவில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் கால்நடைகள் பராமரிப்பு இன்றியே காணப்படுகின்றன.

"தற்போது இரணைதீவில் நாய்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. நாய்களால் கால்நடைகள் அழிக்கப்படுவதன் காரணமாக இம்முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

"நாய்களை இரணைதீவில் இருந்து கொண்டு செல்வதற்கு கடற்படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர். அதேவேளை, இரணைதீவில் அனைத்து கால்நடைகளையும் ஓரிடத்தில் இணைத்து ஒரு பண்ணையாக செயற்படுத்துவதன் மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது" என்றார்.

கிழக்கு ஆளுநராக நியமிக்குமாறு

## ஜனாதிபதிக்கு கடிதம்

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்



கிழக்கு மாகாண ஆளுநராக முன்னாள் அமைச்சரும் இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் முதலாவது எதிர்க்கட்சி தலைவருமான வேதாந்தி சட்டத்தரணி எம்.எச். சேகு இஸ்ஸதீனை நியமிக்குமாறு, நட்பிட்டிமுனை பளீல் பவுண்டேஷன் சமூக சேவை அமைப்பின் தலைவரும் கல்முனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான தேசகீர்த்தி அப்துல் கபூர், ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அப்துல் கபூர் குறிப்பிட்டுள்ளதாவது, 'வடகிழக்கு இணைந்த மாகாணத்தின் முதலாவது மாகாண சபையின் முதலாவது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த காலத்தில் தமிழ் தலைவர்களுடனும் தமிழ் மக்களுடனும் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து வந்தவர். எனவே, கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் பதவிக்கு இவர் மிகவும் பொருத்தமானவர் ஆவார்' என்று, அக்கடிதத்தில் அப்துல் கபூர் குறிப்பிட்டுள்ளார்.




டொக்யாட் கிளை அலுவலகம்

## திருகோணமலை துறைமுக வளாகத்தில்

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

கொழும்பு, டொக்யாட் கிளை அலுவலகம், திருகோணமலையில் உள்ள வளாகத்தில், நேற்று (02) திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக துறைமுகங்கள் கப்பற்துறை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

உற்பத்தி துறையின் ஏற்றுமதி, இறக்குமதி ஊடாக மேலும் வலுப்படுத்தும் நோக்கில், திருகோணமலை துறை முக வளாகத்தில் இக்கிளை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் டொக்யாட் நிறுவனத்தின் தலைவர் டானக, இலங்கை துறைமுக அதிகார சபையின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## யாழின் பல பகுதிகளுக்கு ஜீவன் விஜயம்

■ எம்.றொசாந்த்



வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ். மாவட்டத்தில் சில இடங்களுக்கு, நேற்று (02), நேரில் சென்று பார்வையிட்டார்.

பயணக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ள நிலையில், கொரோனா தொற்று பாதுகாப்பு நடவடிக்கைகள், ஏனைய அபிருத்தி நடவடிக்கைகள், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள் குறித்து இதன்போது கேட்டறிந்துகொண்டார்.

இந்திய மீனவர்களை

## சிறையில் சந்திக்க நீதவான் அனுமதி

■ எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை, இந்திய தூதரக அதிகாரிகள் பார்வையிடுவதற்கும் இந்தியாவிலுள்ள உறவினர்களுடன் உரையாடுவதற்கும், பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை அனுமதி வழங்கினர்.

இந்த வழக்கு, நேற்று முன்தினம் (01) எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மீனவர்கள் சார்பில் சட்டத்தரணி லோ.குகதாசன் ஆஜராகியிருந்தார்.

LK Newspapers Viber Community

இதுவரை எட்டாக்கனியாக இருந்த விடயம்

# தற்போது எம்மவர்களுக்கு கிடைத்துள்ளமை பெருமிதம்

## என்கிறார் அரவிந்தகுமார் எம்.பி

■ எம். செல்வராஜா



எம் சமூகத்தைச் சார்ந்த ஐவருக்கு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினூடாக தேயிலை கன்று தவறணைகள் ஸ்தாபிப்பதற்கான அனுமதி பத்திரம், மானியத்தை பெற்றுக்கொடுக்க கிடைத்த வாய்ப்பையொட்டி பெருமிதம் அடைகின்றேன் எனத் தெரிவித்த பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார், இவ்வளவு காலமும் எம்மவர்களுக்கு இவ்வாறான வாய்ப்பு ஓர் எட்டாக் கனியாகவே இருந்து வந்துள்ளதென தெரிவித்தார்.

ஹாலி-எலை சிறுதோட்ட தேயிலை அபிவிருத்தி அதிகார சபையின் காரியாலயத்தில் நடைபெற்ற, அனுமதிப் பத்திரம், காசோலை, நீர் இரைக்கும் இயந்திரங்களை கையளிக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இவ்வாறான வாய்ப்புகளை பெற எம்மவர்கள் முயற்சி செய்தாலும் ஏதோவொரு காரணத்திற்காக அவர்கள் புறக்கணிக்கப்பட்ட நிலைமையே காணப்பட்டது. ஆனால், தற்போது தான் ஆளும் தரப்பில் இணைந்து செயற்படுவதன் காரணமாக, எவ்வித தடையுமின்றி எம் சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு இந்த அரிய வாய்ப்பை பெற்றுக்கொடுக்க ஏதுவாயிற்று. இதனால் பெரும் பயனை அடையப் போவது எம்மவர்களேயாவார்.

சிறு தோட்ட தேயிலை பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கோடு, அரசு செயற்படுவதன் காரணமாக பதுளை மாவட்டத்தில் தேயிலை கன்றுகளுக்கான தேவைகள் அதிகமாகவேயுள்ளது.

கன்று தவறணைகளை வெற்றிகரமாக முன்கொண்டு செல்லுவதற்கான பயிற்சிகள், ஆலோசனைகள் மற்றும் கண்காணிப்புகள் போன்றவற்றை அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் கிரமமாக மேற்கொள்வர் என மேலும் குறிப்பிட்டார்.

பொகவந்தலாவையில் போலி கால்நடை

# மருத்துவர் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்

■ ரஞ்சித் ராஜபக்ஷ



கால்நடை மருத்துவராக தன்னை அடையாளம் காட்டிக்கொண்டு, நோய்த்தொற்றுக்கு உள்ளாகும் கால்நடைகளுக்கு வைத்தியம் செய்த சந்தேகநபர் ஒருவர், பொகவந்தலாவை கால்நடை மருத்துவ அலுவலக அதிகாரிகளால் பொகவ்நதலாவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தன்னை கால்நடை மருத்துவராக அடையாளப்படுத்தி கொண்டு, பெருந்தோட்டங்களில் நோய்த்தொற்றுக்கு உள்ளாகும் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதுடன், இதற்காக பெருந்தொகை பணத்தையும் அறிவிடுவதாக கிடைத்த தகவலுக்கமையவே இவர் பிடிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கொட்டியாகலை தோட்டத்திலுள்ள கால்நடை ஒன்றுக்கு, ஓட்டோவில் வருகைத் தந்து சிகிச்சையளிப்பதாக கிடைத்த தகவலின் பேரில், பொகவந்தலாவை கால்நடை மருத்துவ அலுவலக அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு, மருத்துவ உபகரணங்களும் பொலிஸாரின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளது.



முன்னாள் எம்.பி திலகர்

# இந்திய உதவி உயர்ஸ்தானிகரை சந்தித்தார்

இலங்கைக்கான இந்திய உதவி உயர்ஸ்தானிகர் (கண்டி) முனைவர் எஸ். ஆதிராவை, முன்னாள் நுவரெலிய மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜா சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் தலைமையில் இயங்கும் தோட்டத் தொழிலாளர் கல்வி நிதியத்தில், பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, அத்தகைய உதவிகளைப் பெறுபவர்களின் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது, அவர்களுக்கான புலமைப்பரிசில் தொகையை அதிகரிப்பது, முதலான விடயங்கள் குறித்து, இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.



# நூல்கள் அன்பளிப்பு

நமுனுகுல பகுதியில் மலைச்சுவடு என்ற பெயரில் நூலகமொன்றை ஸ்தாபித்து நடத்தி வரும், யாழ். பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீட மாணவன் இரா. பிரசாந்குமார், கந்தெகெதர, மாத்தளை தோட்டத்தில் இயங்கி வரும் இந்து மாமன்ற வாசிகசாலைக்கு ஒரு தொகுதி நூல்களை நேற்று முன்தினம் (01) அன்பளிப்பாக வழங்கினார்.

இவர் பள்ளகட்டுவ- கலபிட்டகந்த தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. ( ஆ. புவியரசன்)







தொடர் மழையால் நல்லாட்சியில் அமைக்கப்பட்ட

# மகாத்மா காந்தி புரத்தில் பல வீடுகள் தாழிறங்கின

■ நீலமேகம் பிரசாந்த்

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் டன்சினன் பகுதியில் கட்டப்பட்ட, மகாத்மா காந்தி புரத்தில் 148 வீடுகளில் பல வீடுகள் தாழிறங்கியுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது பெய்து வருகின்ற அடைமழையால், வீட்டின் முற்புறமும், பிற்பகுதியிலும் உள்ள மண்மேடுகள் இடிந்து விழுவதினாலும் மண் திட்டுக்கள் கீழ் இறங்குவதாலும் அச்சமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக குறித்த வீடுகளில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இரவு நேரங்களில் பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாகவும் ஏதாவது அசம்பாவிதம் ஏற்படும் முன்னர் பாதுகாப்பை உறுதிப்படுத்தி தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பவமிடத்துக்கு சென்று பார்வையிட்ட டன்சினன் வட்டார கொத்மலை பிரதேச சபை உறுப்பினர் ரஜினிகாந்த், இவ்விடயம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்கும் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரனுக்கும் கொண்டு சென்று உள்ளதுடன், அதேசமயத்தில் தோட்ட நிர்வாகத்திற்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



ஜீ.பி.எஸ் இயந்திரத்தால் சிக்கிய சாரதி

# 60 மில்லியன் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டது

■ கே.சுந்தரலிங்கம், ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டனிலுள்ள தனியார் வங்கி ஒன்றின் தானியக்க இயந்திரத்தில் வைப்பிலிடுவதற்காக, கொண்டுவரப்பட்ட சுமார் 60 மில்லியன் ரூபாயை கொள்ளையிட்டு செல்ல முயற்சித்த முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை (01) இடம்பெற்றுள்ளது. கொழும்பில் இருந்து தனியார் வங்கிகளில் உள்ள தன்னியக்க இயந்திரங்களுக்கு நிரப்புவதற்கு கொண்டு வரப்பட்ட பணமே இவ்வாறு கொள்ளையிட முயற்சிக்கப்பட்டுள்ளது.

ஹட்டனிலுள்ள தனியார் வங்கிக்கு வருகைத் தந்த அதிகாரிகள், சாரதியைத் தவிர ஏனைய அனைவரும் வானிலிருந்து இறங்கி, வங்கிக்குள் நுழைவதைப் பயன்படுத்திக்கொண்ட சந்தேகநபர் பணம் மற்றும் வானுடன் தலைமறைவானார். அந்த வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த ஜீ.பி.எஸ். இயந்திரம் மூலம் சந்தேகநபர் வாகனத்தை செலுத்தும் வீதிகள் குறித்து ஆராய்ந்த பொலிஸ்,குறித்த நபரை கைதுசெய்தது.

நல்லிணக்கத் திட்டங்கள் குறித்து

# நட்பு ரீதியான கலந்துரையாடல்



இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுள்ள நல்லிணக்கத் திட்டங்கள் குறித்து, இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான பிரான்ஸ் நாட்டின் தூதுவர் எரிக் லாவெர்டுடன், பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான் நட்புரீதியாக கலந்துரையாடினர்.

இலங்கையின் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் முதலாம் ஆண்டு வருடாந்த மாநாடு, பிளம்ஜசிளச் கேட்போர் கூடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட போதே, இந்த நட்புரீதியான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அத்துடன், இலங்கையில் உள்ள ஜப்பான் தூதரகத்தின் அரசியல் பிரிவு செயலாளர் அகிரா ஹோகமுராவுடன் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்தும் இதன்போது செந்தில் தொண்டமான் கலந்துரையாடியுள்ளார்.

ஊவா மாகாண தமிழ் பாடசாலைகளுக்கு

# விசேட விடுமுறை

■ ஆ.புவியரசன்

ஊவா மாகாணத்தில் உள்ள சகல தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 5ஆம் திகதி, வெள்ளிக்கிழமை விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

> எதிர்வரும் 5ஆம் திகதி, வெள்ளிக்கிழமை விசேட விடுமுறை வழங்கப்பட்டு, பதில் பாடசாலை தினம் எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும்

ஊவா மாகாண ஆளுநர் ஜே.எம்.முஸம்மில்லின் விசேட பணிப்புரைக்கு அமைய, மாகாணத்தில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ் விடுமுறை தினத்திற்குரிய பதில் பாடசாலை தினத்தை எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.



பசறை பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம்

# 11 மேலதிக வாக்குகளால் வெற்றி

■ ராமு தனராஜா

பசறை பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் நேற்று (2) 11 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

பசறை பிரதேச சபையின் விசேட சபை அமர்வு நேற்று (2) காலை 9.30 மணியளவில், பசறை பிரதேச சபையின் தவிசாளர் ஆர். எம் ஞானதிலக தலைமையில் ஆரம்பமானது.

இதன்போது சபையின் உறுப்பினர்கள் 23 பேரில் இன்றைய அமர்வுக்கு சுமார் 15 பேர் மாத்திரம் சமூகமளித்திருந்தனர்.

இந்த நிலையில், சபையின் தவிசாளர் ஞானதிலக, சபை உறுப்பினர்களிடம் 202ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட அறிக்கையினை சமர்ப்பித்தார்.

இதன்போது 11 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 4 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் 03 உறுப்பினர்களும் ஜே.வி.பியின் ஓர் உறுப்பினருமாக மொத்தமாக 04 பேர் எதிராக வாக்களித்தனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள் மூவர் ஆதரவாக வாக்களித்ததுடன் 08 உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளிக்கவில்லை.

ஊவா மாகாணத்தில்

# பல இடங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

■ எம். செல்வராஜா

சீரற்ற வானிலையால் பதுளை மாவட்டத்தில் எல்ல, பசறை ஆகிய பகுதிகளில் மண்சரிவு அபாயம் உள்ளதென, தேசிய கட்டட ஆய்வு நிலையமும் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் தெரிவித்துள்ளன.

அத்துடன், குறித்த நிறுவனங்களால் மண்சரிவு ஏற்படும் என அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் வசிக்கும் மக்கள், பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை பசறை, ஓுணுகலை, மடுல்சீமை, நமுனுகலை ஆகிய இடங்களில் ஆங்காங்கே மண்சரிவுகள் இடம்பெற்றுள்ளன.

JK Newspapers Viber Community

# மூழ்கும் கப்பலைக் காப்பாற்றாது இருப்பது ஏன்?

'விடை கொடு எங்கள் நாடே
கடல் வாசல் தெளிக்கும் வீடே
பனை மர காடே, பறவைகள் கூடே
மறுமுறை ஒரு முறை பார்போமா?
உதட்டில் புன்னகை புதைத்தோம்
உயிரை உடம்புக்குள் புதைத்தோம்
வெறும் கூடுகள் மட்டும் ஊர்வலம்
போகின்றோம்' என்ற பாடல் வரிகள், உணர்த்தும் மனநிலையை ஒத்ததாகவே, இலங்கை மக்களின் இன்றைய நிலையும் காணப்படுகின்றது.

சீனி இல்லை; அரிசி இல்லை; மா இல்லை; காஸ் இல்லை; உரமில்லை; கிருமிநாசினிகள் இல்லை; கால்நடைகளுக்கான தீவனங்களும் மருந்துகளும் இல்லை என, கிடைக்கப்பெறாத பொருட்களின் பட்டியல் நீண்டுகொண்டு செல்வதால், அவற்றைத் தேடிப் பெறுவதே, இலங்கை மக்களின் வாழ்க்கையாகி விட்டது.

இல்லாமைகள் தொடர்வது காரணமாக, வளமாக வாழ ஆசைப்பட்டு, இலட்சியக் கோட்டைகள் கட்டியிருந்த மண்ணிலிருந்து, வாழவழியின்றி, பெரும்பாலானவர்கள் 'வெளிநாடுகளுக்கு ஓடித் தப்புவோம்' என்ற உந்துதலில் அலுவல்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பெற்றோர், தமது பிள்ளைகளின் எதிர்காலம் சுபீட்சமானதாக இருக்க வேண்டும் என்று சிந்திக்கும்போது, அவர்களுக்கு, பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறிகளாகத் தென்படுகின்றது. இதனால், பெற்றோரே தமது பிள்ளைகளை முன்வந்து, படிப்புக்காகவோ, வேலைவாய்ப்பைத் தேடிக்கொடுத்தோ வெளிநாட்டுக்கு அனுப்பிவைக்கும் கைங்கரியங்களையே முன்னெடுக்கிறார்கள். இந்தப்போக்கு பெரும்பாலும் தமிழ், சிங்கள, முஸ்லிம் என சகல சமூகங்களிலும் தற்போது மும்முரமாகக் காணப்படுகின்றது.

இதன் வெளிப்பாடாகத்தான், கடவுச்சீட்டு அலுவலகத்தில் தினசரி, 3,000க்கும் மேற்பட்ட கடவுச்சீட்டுகள் ஒருநாள் சேவையூடாகவே வழங்கப்படுகின்றன. அவ்வாறே, அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், சான்றிதழ்களை உறுதிப்படுத்தும் வெளிநாட்டமைச்சு அலுவலகம், தூதரகங்கள், உயர்ஸ்தானிகரகங்கள் என வெளிநாடு செல்வதற்குத் தேவையான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் அலுவலகங்களில் வழமைக்கு மாறாக, மக்கள் முட்டிமோதுகிறார்கள்.

நாடு முடக்கப்பட்டு, ஒக்டோபரில் படிப்படியாக விடுவிக்கப்பட்ட நாள்களில் இருந்தே, 3,000 முதல் 4,000 பேர் வரை, தினமும் வரிசையில் காத்திருக்கும் நிலைமை ஆரம்பித்துவிட்டது.

இவ்வாறு, 'இந்த நாட்டில், எங்களுக்கு எதிர்காலம் இல்லை' என்ற எண்ணம், இந்த நாட்டு மக்கள் மத்தியில் உருவாகக் காரணம், அரசாங்கத்தின் செயற்பாடுகளும் கபடத்தனங்களும் ஆகும்.

தாங்கள் ஏமாற்றப்படுகின்றோம் என்ற ஆதங்கம், மக்களிடம் வந்துவிட்டது. ஏனென்றால், ஆசை வார்த்தைகள் கூறி, தம்மை அழைத்துச் சென்ற அரசாங்கம், 'தொப்'பெனக் கைவிட்டு விட்டதால் வெறுப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இந்த வெறுப்புணர்வு, 'தப்பிப்பிழைத்தல்' மனப்பான்மையைத் தூண்டி, மக்களை நாட்டிலிருந்து வெளியேற வைக்கின்றது.

வளங்கள் வெளியேறினால், நாடு உருப்படாது; வளமான வாழ்க்கையை மக்கள் வாழ முடியாது. 'சொந்த மண்ணை மறுமுறை, ஒரு முறை பார்ப்போமா' என்ற ஏக்கத்துடன், மக்கள் வெளியேறும் நிலைக்கு அரசாங்கம் கொண்டுவந்து விட்டுவிட்டது.

எனவே, மூழ்கும் கப்பல் போன்றிருக்கும் தாய்நாட்டைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்காமல், அரசாங்கம் காரணங்களைச் சொல்லிக்கொண்டிருப்பது ஏன் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் முளைவிட ஆரம்பித்துள்ளது. மக்களின் சந்தேகத்தை அரசாங்கம் புறக்கணிக்கக்கூடாது.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

குணங்கள் மாறுவது இயல்பானது. ஆனால், அவை முன்னேற்றகரமானவையாக அமைதல் வேண்டும். தற்போதைய நெருக்கடியான வாழ்க்கைச் சூழலிலும் பரந்த நெஞ்சத்துடன் வாழவேண்டும்.

சில வர்த்தகர்கள் ஆரம்பத்தில் கஷ்டப்பட்டு, பலசரக்குக் கடையை வைப்பார்கள். அயலில் உள்ள மக்கள், தெரிந்தவர், பரிதாபம் கருதி அந்தக் கடையில் பொருட்களை வாங்குவார்கள். காலப்போக்கில், அந்தப் பலசரக்குக் கடை பெரியளவில் வளர்ந்துவிடும்.

அத்துடன், முதலாளிக்கும் கர்வம் வந்துவிடும். பழைய வாடிக்கையாளர்களைப் புறம்தள்ளி, வசதியுள்ள புதிய வாடிக்கையாளர்களுடன் நட்புக் கொண்டுவிடுவார்.

ஆனால், மிகவும் தர்மசிந்தையுள்ள அநேக வர்த்தகர்கள், மக்களுடன் இணைந்து தங்கள் கடமைகளைத் தக்கதருணத்தில் செய்துவிடுவார்கள்.

நேர்மையான வர்த்தகம் தோற்றுப்போவது கிடையாது. பலநிறுவனங்கள் சமூகசேவைகளில் மும்முரமாக இயங்குகின்றன. நல்லது செய்தால், வரவு அதிகமாகும். எந்தச் சோதனையிலும் தன்னிலை மாறலாகாது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

### தேசப்பற்றின் பெயரில்

# இருப்புக்கான போராட்டம்



எம்.எஸ்.எம். ஐயூப்

அரசாங்கத்தின் சிறிய 10 பங்காளிக் கட்சிகளும், உண்மையிலேயே அரசாங்கத்தின் தலைவர்களிடம் ஏமாந்துவிட்டார்களா? அல்லது, மக்களை அவர்கள் மற்றொரு சுற்று, ஏமாற்ற முயல்கிறார்களா? தற்போது அரசாங்கத்துக்கும் அந்தக் கட்சிகளுக்கும் இடையில் தோன்றி இருப்பதைப் போல் தெரியும் பிணக்கைப் பார்த்தால், இவ்வாறு தான் கேள்விகள் கேட்கத் தோன்றுகிறது.

'யுகதனவி' என்ற பெயரில் அழைக்கப்படும் கெரவலபிட்டியவில் அமைந்துள்ள மின்சார உற்பத்தி நிலையத்தின் பங்குகளில் 40 சதவீதத்தை, அமெரிக்காவின் 'நியூ போட்ரஸ் எனர்ஜி' என்ற நிறுவனத்திடம் கையளிப்பதற்காக, அரசாங்கம் அண்மையில் ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டது. அந்த ஒப்பந்தத்துக்கு, இந்தச் சிறிய கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

ஆனால், அந்த எதிர்ப்பு உண்மையானதா? அல்லது, தற்போது அரசாங்கத்துக்கு எதிராக, நாட்டில் மேலோங்கி வரும் எதிர்ப்பைத் திசைதிருப்புவதற்காக, அச்சிறு கட்சிகளின் தலைவர்கள் முயல்கிறார்களா என்று, பலர் இப்போது கேள்வி எழுப்பி வருகின்றனர். அவர்கள், அவ்வாறு செய்யக்கூடியவர்கள் தான்!

அமைச்சரவையின் அனுமதி பெறாமலே, 'யுகதனவி' மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகள் தொடர்பில், அமெரிக்க நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டதாக, இச்சிறு கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. ஆனால், அதற்கு அமைச்சரவையின் அங்கிகாரம் கிடைத்ததாக, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

இந்த ஒப்பந்தத்துக்கு, அமைச்சரவையின் அங்கிகாரம் கிடைக்கவில்லை என்றும் ஆனால், அண்மையில் ஒருநாள் நள்ளிரவில், 'நியூ போட்ரஸ் எனர்ஜி' நிறுவனத்தின் அதிகாரிகள், இலங்கைக்கு வந்து, அன்று இரவே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுவிட்டு, விடியும்முன்னர் திரும்பிச் சென்றுள்ளனர் என்று, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க அண்மையில் கூறியிருந்தார்.

இந்தச் சர்ச்சையைப் பற்றிக் கலந்துரையாட, நேரத்தை ஒதுக்கித் தருமாறு, இந்தச் சிறு கட்சிகள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்தனர். ஆனால், அமைச்சரவைக் கூட்டத்திலோ, ஆளும் கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்திலோ, அதைப் பற்றிப் பேசலாம் என, அந்தக் கோரிக்கைக்கான பதிலில் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து, அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்ட போது, அமைச்சரவை அங்கிகாரம் இல்லாமலே, இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு உள்ளதாக விமல் கூறினார்.

கைச்சாத்திடப்பட்டது முடிவானதோர் ஒப்பந்தமல்ல என்றும் இந்த விடயத்துக்காக, மேலும் இரண்டு ஒப்பந்தங்களை கைச்சாத்திட வேண்டியுள்ளது என்றும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறி இருக்கிறார்.

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதையறிந்த சிறு கட்சிகளின் தலைவர்கள், வெளியே வந்து பகிரங்கமாக, அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை விமர்சித்தனர்.

அமைச்சரவைக் கூட்டமொன்றின் முடிவில், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்த ஒப்பந்தத்தைப் பற்றி பிரஸ்தாபித்ததாகவும், ஆனால், மறுநாள் அமைச்சரவைக் கூட்டத்தின் அறிக்கையில், அந்த ஒப்பந்தம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்துக்கு, அமைச்சரவையின் அங்கிகாரம் கிடைத்ததாகக் குறிப்பிடப்பட்டு இருந்ததாகவும் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச இந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராகச் செயற்படுவோரின் பின்புறத்துக்கு உதைத்து விரட்ட வேண்டும் என்றும் அவர் கூறினார். இந்த அரசாங்கம், இதற்கு முன்னர் இருந்த எந்தவோர் அரசாங்கத்தைப் பார்க்கிலும், ஊழல் மலிந்த அரசாங்கமாக இருப்பதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தேசிய சொத்துகளை வெளிநாட்டவரிடம் கையளிப்பதைத் தாம் எதிர்ப்பதாகவும் தேசிய பாதுகாப்புக்கு குந்தகமான திட்டங்களைத் தாம் எதிர்ப்பதாகவும் இக்கட்சிகள் கூறுகின்றன.

அரசாங்கம், கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு முனையத்தின் 49 சதவீத பங்குகளை, இந்தியாவின் அதானி குழுமத்திடம் வழங்க முடிவு செய்த போது, கடந்த ஜனவரி மாதமும் இக்கட்சிகள் இவ்வாறே கூறின.

எதிர்க்கட்சிகள் அதற்கு முன்னரே அத்திட்டத்துக்கு எதிரான போராட்டங்களை ஆரம்பித்து இருந்தன. இந்த நிலையில், கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்திடம் கையளிப்பதில்லை எனவும் அதற்குப் பதிலாக மேற்கு முனையத்தை வழங்குவதாகவும் அரசாங்கம் அறிவித்தது. அதனை, இக்கட்சிகள் ஏற்றுக் கொண்டன. கிழக்கு முனையம் தேசிய சொத்தாவதும் மேற்கு முனையம் தேசிய சொத்தாகாததும் எவ்வாறு என்பதை அக்கட்சிகள் கூறவில்லை.

இக்கட்சிகளின் தலைவர்கள், பறைசாற்றிக் கொள்ளும் அவர்களது தேசப்பற்றின் நிலைமையையே இது காட்டுகிறது. கெரவலபிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் விடயத்திலும், அவர்கள் தொடர்ந்தும் உறுதியாகத் தமது நிலைப்பாட்டில் இருப்பார்களா என்பது சந்தேகமே. அதேவேளை, ராஜபக்ஷர்களின் தேசப்பற்றும் அவர்கள் நாட்டுக்கு வழங்கிய உத்தரவாதங்களும், தற்போது காற்றோடு பறந்துள்ளன.

கடந்த அரசாங்கம், கிழக்கு முனையம் தொடர்பான ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட போது, "தேசிய சொத்துகளை விற்பனை செய்கிறது" என்றும் "தேசத்துரோகம்" என்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் கூறினார்கள்.

ஆனால், தாம் பதவிக்கு வந்து, அதையே செய்ய முற்பட்டார்கள். பின்னர், கிழக்கு முனையத்தைக் கொடுக்காது, மேற்கு முனையத்தைக் கொடுத்தார்கள். எங்கே அவர்கள் கூறிய தேசப்பற்று?

கடந்த அரசாங்கம், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்டிய பிரதேசத்தை, சீனாவுடன் சேர்ந்து தொழில் பேட்டையாக்க ஒப்பந்தம் செய்து கொண்ட போது, அது தேசிய சொத்துகளை விற்பனை செய்தலாகும் என்றும் தாம் பதவிக்கு வந்து அதை மீளப் பெறுவதாகவும் கூறினார்கள். அவர்கள் பதவிக்கு வந்து, அதனை மீளப்பெறவும் இல்லை. மாறாக, சீனாவுக்கு துறைமுக நகரத்தை ஏறத்தாழ விற்றுவிட்டார்கள்.

'மிலேனியம் சலேஞ்' ஒப்பந்தம், அமெரிக்காவுக்கு நாட்டின் காணிகளின் நிர்வாக அதிகாரத்தை கையளிப்பதாகும் என்றார்கள். ஆனால், அதே தலைவர்கள் பதவிக்கு வந்து, அதே ஒப்பந்தத்தை நிறைவேற்ற முயன்றார்கள். இச்சிறு கட்சிகள், அதனை எதிர்த்தன. நாட்டில் எதிர்ப்பு அதிகரிக்கவே, அத்திட்டம் கைவிடப்பட்டது.

இவ்வாறு அடிக்கடி எதிர்ப்புகளைத் தெரிவித்தாலும், சில நாள்களுக்குப் பின்னர், அதைக் கைவிட்டு, எதுவும் நடைபெறாததைப் போல் இருக்கிறார்கள். ஹம்பாந்தோட்டை விவகாரம், துறைமுக நகர விவகாரம் கிழக்கு - மேற்கு முனையங்கள் விவகாரம் ஆகியவற்றின் போது, அவ்வாறு தான் நடந்து கொண்டார்கள்.

விமலுக்கும் பசிலுக்கும் இடையிலான பிணக்கு, முன்னைய மஹிந்த ஆட்சி காலத்தில் இருந்தே உள்ளதொன்றாகும். எனவே, 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில், மஹிந்த தோல்வியுற்ற போது, பசிலே அதற்குக் காரணமென, விமல் கூறினார்.

அதன் பின்னர் பசில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையிலான கூட்டணியிலுள்ள பெரும்பாலான சிறு கட்சிகளைப் பகைத்துக் கொண்டார். அவர் அவற்றை கணக்கிலெடுக்காமையே அதற்கக் காரணமாகும்.

கடந்த ஜூலை மாதம், எண்ணெய் விலை ஏற்றத்தை அடுத்து, எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில் இராஜினாமாச் செய்ய வேண்டும் என, பசில் ஆதரவாளரான பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் கூறினார். அதுவும் பெரும் சர்ச்சையாக மாறியது.

இச்சிறு கட்சிகளுக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான பிணக்கு, அரசாங்கம் செல்வாக்கை இழந்து வருவதிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கான நாடகம் என பலர் கருதுகின்றனர்.

ஆனால், "உதைத்து விரட்ட வேண்டும்"; "இந்த அரசாங்கமே மிகவும் ஊழல் மலிந்த அரசாங்கம்" போன்ற வசைபாடல்கள், போலியானவையாக இருக்குமா என்ற கேள்வியையும் எழுப்ப வேண்டியுள்ளது.

விமல் முன்நின்று, 'மஹிந்தவோடு எழுவோம்' என்ற சுலோகத்துடன், சிறு கட்சிகளால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களே, பொதுஜன பெரமுன பதவிக்கு வருவதற்கு பிரதான காரணங்களில் ஒன்றாகியது. ஆனால், மஹிந்தவின் பெயர் பாவிக்கப்படாதிருந்தால், சிறு கட்சிகளால் அவ்வாறானதோர் அலையை உருவாக்கியிருக்க முடியாது.

அதேவேளை, பொதுஜன பெரமுனவின் தலைவர்கள், இச்சிறு கட்சிகளைக் கூட்டணியிலிருந்து வெளியேற்றினால், அக்கட்சிகளால் தனியே எதையும் செய்யவும் முடியாது. தனித்தால் அக்கட்சிகளுக்கு மிகச் சிலரே ஆதரவளிப்பார்கள்.

அதேவேளை, இவர்களும் ஊழல்களில் ஈடுபட்டுள்ளதால், வெளியே சென்று மக்கள் விடுதலை முன்னணியைப் போல், அரசாங்கத்தின் ஊழல்களைப் பற்றிப் பேசுவது ஆபத்தானதாகும்.

ராஜபக்ஷர்களை எதிர்த்துச் செயற்படாத போதிலும், 52 நாள் அரசாங்கத்தை ஆதரிக்க வர மறுத்தமைக்காக, ரிஷாட் பதியுதீன் படும் பாட்டைப் பார்த்துவிட்டு, இவர்கள் ராஜபக்ஷர்களுக்கு எதிராகப் பெரிதாக வாய் திறப்பார்களா என்பது சந்தேகமே. தாமே முன்நின்று, 20 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கிய அதிகாரத்தைப் பற்றி அவர்களுக்குத் தெரியும். எனவே இந்த ஆட்டம் சில நாள்களுக்குத் தான்.

## கடிதங்கள்

### போக்குவரத்து துண்டிக்கப்பட்ட கிராமம்



கிளிநொச்சி, பூநகரி, முக்கொம்பன் மகா வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். கிளிநொச்சி, அக்கராயன், கந்தபுரம், முக்கொம்பன் வழியாக, யாழ்ப்பாணத்துக்கு நடைபெற்ற ஒரேயோர் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவை, கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக, வீதி சீரின்மை காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது.

முக்கொம்பன் மகா வித்தியாலயம், கண்ணகைபுரம் அ.த.க பாடசாலை, கந்தபுரம் இல.01, இல.02 பாடசாலைகள், அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், முல்லைத்தீவின் ஆரோக்கியபுரம், அமதிபுரம் பாடசாலை என்பவற்றுக்குச் செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் போன்றோர் தினமும் போக்குவரத்து நெருக்கடியைச் சந்தித்துவருகின்றனர்.

குறிப்பாக, யாழ்ப்பாணத்துக்கு ஆசிரியர்கள் இந்த பஸ் சேவையையே பயன்படுத்தி வந்தனர். தற்போது, போக்குவரத்து துண்டிக்கப்பட்ட கிராமமாக முக்கொம்பன் கிராமம் காணப்படுகின்றது. கந்தபுரத்துக்கும் முக்கொம்பன் கிராமத்துக்கும் இடையிலான வீதியைப் புனரமைப்பதற்கு, கிளிநொச்சி மாவட்டச் செயலகம் உரிய நடவடிக்கைகளை எடுக்காததன் காரணமாக, முக்கொம்பன் கிராம மக்கள், போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்ட நிலையில் தற்போது உள்ளனர். குறித்த வீதியைப் புனரமைப்பதற்கு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே, பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கையாக உள்ளது.

- நடராஜா கிருஸ்ணகுமார்

LK Newspapers Viber Community

சிம்லா

# பாரதிய ஜனதாவுக்கு பின்னடைவு




இமாச்சல பிரதேச மாநிலத்தில் ஒரு மக்களவை தொகுதிக்கும் 3 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் நடந்த இடைத் தேர்தலில் ஆளும் பாரதிய ஜனதா கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சியான காங்கிரஸ் அனைத்து தொகுதிகளிலும் முன்னிலை பெற்றுள்ளது.

நாட்டில் காலியாக உள்ள 3 மக்களவைத் தொகுதிகள் மற்றும் 29 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது.

மத்திய பிரதேசத்தில் கந்த்வா, இமாச்சல பிரதேசத்தில் மாண்டி, யூனியன் பிரதேசமான தாத்ரா நாகர் ஹவேலி ஆகிய 3 மக்களவைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது.

இமாச்சல பிரதேசத்தில் உள்ள மாண்டி மக்களவை தொகுதி இடைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இங்கு ஏற்கெனவே பா.ஜ.க வெற்றி பெற்றிருந்த நிலையில் தற்போது காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளது.

இந்த தொகுதியில் காங்கிரஸ் 49.13% பாரதிய ஜனதா கட்சி- 48.08% வாக்குகள் பெற்று முன்னிலை வகிக்கின்றன. இதுபோலவே அங்குள்ள 3 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளது. இமாச்சல பிரதேசத்தில் பா.ஜ.க ஆளும் கட்சியாக உள்ள நிலையில் இடைத் தேர்தல் தோல்வி அக்கட்சிக்கு பின்னடைவாக கருதப்படுகிறது.

புதுடெல்லி

## திரிணமுல் காங்கிரஸ் முன்னிலை




இந்தியாவில் மூன்று லோக்சபா மற்றும் 29 சட்டசபை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலின் வாக்கு எண்ணிக்கை விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இதில், மேற்கு வங்கத்தில் காலியாக உள்ள 4 இடங்களிலும் திரிணமுல் காங்கிரஸ் முன்னிலை வகிக்கின்றது. மத்திய பிரதேசத்தில் 3 சட்டசபை தொகுதிகள் மற்றும் ஒரு லோக்சபா தொகுதியில் பாரதிய ஜனதா முன்னிலையில் உள்ளது.

இமாச்சல் பிரதேசத்தின் மாண்டி, தத்ரா நாகர்ஹேவலி, மத்திய பிரதேச மாநிலத்தில் கந்தவா ஆகிய மூன்று லோக்சபா எம்.பிக்களும் இறந்ததையொட்டி காலியாக உள்ள மூன்று லோக்சபா தொகுதிகளுக்கும், பல்வேறு மாநிலங்களில் காலியாக 29 சட்டசபை தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அண்மையில் நடைபெற்றது.

தஞ்சாவூர்

## டொக்டர்களின் அலட்சியம் குழந்தை பிரசவித்த பெண் பலி



தஞ்சாவூர் அரசாங்க மருத்துவ மனையில் குழந்தை பிரசவித்த பெண், டொக்டர்களின் அலட்சியத்தால் பலியான சம்பவம் கவலையைத் தருகிறது.

தஞ்சாவூர், இளங்கார்குடியைச் சேர்ந்த விஜயகுமார் தம்பதிகளுக்கு, 2 வயதில் ஆண் குழந்தையும் இரண்டாவது முறை கர்ப்பமான நிலையில், பிரசவத்துக்காக, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அன்று இரவே, அறுவைச் சிகிச்சை வாயிலாக ஆண் குழந்தை பிறந்தது. மனைவிக்கு மஞ்சள் காமாலை இருப்பதாக கூறிய டொக்டர்கள், 17 நாள்கள், அதிதீவிர சிகிச்சை பிரிவில் வைத்துள்ளனர். 'முறையாக சிகிச்சை அளிக்கவில்லை' எனக் கூறி உறவினர்கள், கர்ப்பிணித்தாயை வீட்டிற்கு அழைத்து சென்றுள்ளனர்.

தொடர்ந்து, கர்ப்பிணியின் வீட்டுக்குச் சென்ற இருதாதிகள், அவரை அம்பியூலன்ஸ் மூலம் வலுக்கட்டாயமாக, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளனர். அங்கு சிகிச்சை பலனின்றி, கர்ப்பிணித்தாய் இறந்தார். 'அவரது இறப்பில் எந்த சந்தேகமும் இல்லை. நீதிமன்றம் செல்ல மாட்டோம்' என எழுதி வாங்கிய பின்னரே, சடலத்தை ஒப்படைத்து உள்ளனர்.



ஸ்ரீபெரும்புதூர்

## சுவர் இடிந்து விழுந்து எட்டு வயது சிறுமி பலி

ஒரத்தூரில் வீட்டின் உட்புறச் சுவர் இடிந்து விழுந்ததில், 8 வயது சிறுமி பரிதாபமாக இறந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை அளித்துள்ளது.

ஒரத்தூர் ஊராட்சி, இருளர் குடியிருப்பைச் சேர்ந்தகூலி தொழிலாளியின் எட்டு வயது மகளே இவ்வாறு இறந்துள்ளார். இறந்த சிறுமி 3ம் வகுப்பில் கற்று வருகிறார். சிறுமி, அருகில் உள்ள தன் பெரியப்பாவின் வீட்டில் விளையாடினார். அப்போது எதிர்பாராத விதமாக, வீட்டின் உட்புற, பலவீனமான சுவர் இடிந்து விழுந்தது. இதில், தலையில் பலத்த காயமடைந்த சிறுமி, அதே இடத்திலேயே இறந்தார். தகவலறிந்து சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்கு, மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

சென்னை

## கமலின் அன்னதான திட்டம்



நடிகர் கமலின் பிறந்த நாளை முன்னிட்டு, 'ஐயமிட்டு உண்' என்ற அன்னதான திட்டத்தை, மக்கள் நீதி மய்யம் ஆரம்பித்துள்ளது.

நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவருமான கமல், தன், 67வது பிறந்த நாளை, நவம்பர் 7ஆம் திகதி கொண்டாடுகிறார். இதை முன்னிட்டு, அக்கட்சி சார்பில், பல்வேறு நலத்திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, கண் மற்றும் உடல் தானம் செய்த கட்சியினர், நவம்பர் 1ஆம் திகதி முதல்7ஆம் திகதி வரை, தினம் ஒரு இலட்சம் விதம், ஏழு நாள்களுக்கு, 7இலட்சம் மக்களுக்கு அன்னதானம் வழங்க உள்ளனர்.





## பால் சொரியும் வேம்பமரம்

மட்டக்களப்பு மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திலுள்ள மகிழூர்முனை கிராமசேவையாளர் பிரிவில் பிராமணர் ஒழுங்கையில் வயல் ஓரமாக நிற்கும் வேப்பமரத்திலிருந்து பால் வடிந்து கொண்டிருக்கிறது. இதை மக்கள் ஆர்வத்துடன் பார்த்துவருகிறார்கள். (வ. சக்தி)



## இரத்ததானம்

மலையக உரிமை மீட்பு பயணம் அமைப்பின் ஏற்பாட்டில் நுவரெலியா, சீத்தாஎலிய 'எஸ்போர்ட்' சுற்றுலா ஹோட்டலில் இரத்ததான நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர்.இராஜாராம், மலையக உரிமை மீட்பு பயணம் அமைப்பின் உறுப்பினர்களும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர். (பி. கேதீஸ்)







## அரச சேவையா ளர்களுக்கு தமிழ்மொழி பாடநெறி கற்பித்தல்!

சப்ரகமுவ மாகாண பிரதி பிரதான செயலாளர் காரியாலயம் மற்றும் தேசிய மொழிகள் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் என்பன இணைந்து, சப்ரகமுவ மாகாணத்தில் கடமை புரியும் சிங்கள மொழி அரச சேவையாளர்களுக்கு தமிழ்மொழி கற்பிக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. (சிவாணி ஸ்ரீ)



## ஹட்டன் நகர்...

கொரோனா தொற்றுக்கு மத்தியில், ஹட்டன் நகரில், தீபாவளி பண்டிகைக்கான பொருட்கள் கொள்வனவில் மக்கள் ஈடுபட்டுள்ளனர் (ரஞ்சித் ராஜபக்ஷ)







அவுஸ்திரேலியா

# ஒன்றரை வருடத்திற்குப் பின் திறக்கப்பட்ட சர்வதேச எல்லைகள்



அவுஸ்திரேலியாவில் சுமார் 600 நாள்களுக்குப் பின்னர் சர்வதேச எல்லைகள் திறக்கப்பட்டிருப்பதால் அந்நாட்டு மக்கள் உட்சாகமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கருத்திற்கொண்டு உலக அளவில் கடுமையான விதிமுறைகளை நடைமுறைப்படுத்திய நாடுகளில் அவுஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது.

குறிப்பாக கடந்த வருடம் மார்ச் மாதம் அந்நாட்டின் சர்வதேச எல்லைகள் மூடப்பட்டதோடு பயண விதிமுறைகளும், கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

இதனால் மக்கள், தங்களது அயல் மாநிலங்களுக்குச் செல்வதற்கும், தங்களின் குடும்பத்தினரைச் சந்திப்பதற்கும் முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் தற்போது நாட்டின் எல்லைகள் திறக்கப்பட்டிருப்பதால் மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



பிரித்தானியா

## அதிக எடையுடன் பிறந்த குழந்தை

பிரித்தானியாவில் செரல் மிட்செல் என்ற 31 வயதான பெண்ணொருவர் 6.7 கிலோ கிராம் எடை கொண்ட ஆண் குழந்தையொன்றை கடந்த 31 ஆம் திகதி பிரசவித்துள்ளார்.

அல்பா எனப் பெயரிடப்பட்ட இக் குழந்தையானது பிரித்தானியாவில் கடந்த 8 ஆண்டுகளில் பிறந்த 3 ஆவது மிகப்பெரிய குழந்தை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்குழந்தைக்கு 'Baby Hippo', 'Butter Bean', 'pumpkin baby' ஆகிய செல்ல பெயர்களும் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இக் குழந்தையின் புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.



அமெரிக்கா

## கடலுக்கு அடியில் விநோதப் போட்டி

'ஹலோவீன்' பண்டிகையை முன்னிட்டு அமெரிக்காவில் பல்வேறு போட்டிகள், நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாகாணத்தில் கடலுக்கு அடியில் பூசணிக்காயைச் செதுக்கி உருவங்கள் வரையும் விநோத போட்டியொன்று நடைபெற்றுள்ளது.

இதற்காக நீச்சல் வீரர்கள் முதுகில் கத்தி, பூசணிக்காய், ஒட்சிசன் சிலிண்டர்கள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு கடலுக்குள் சென்றுள்ளனர்.

அங்கு விமானம், ஆக்டோபஸ், காதல் உருவங்கள், ஜெல்லிபிஷ் போன்ற பல்வேறு உருவங்களை போட்டியாளர்கள் பூசணிக்காயில் செதுக்கியுள்ளனர்.

இப்போட்டியில் 'டான் ஈட்ஸ்மோர்' என்பவர் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.



அமெரிக்கா

## வைரலாகும் 'My Love'

கலிபோர்னியாவில் உள்ள ஊர்வன மிருகக்காட்சிசாலையின் நிறுவனரான ஜெய் ப்ருவர் என்பவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கதில் பதிவேற்றும் வீடியோக்களால் பலரது கவனத்தையும் ஈர்த்து வருகின்றார்.

குறிப்பாக இவர் அண்மையில் பகிர்ந்த வானவில் நிற பாம்பின் வீடியோவானது இணையவாசிகள் இடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, அதனை தற்போது வரை சுமார் 20 மில்லியனுக்கும் அதிகமானோர் பார்வையிட்டுள்ளனர்.

> பாம்புகளிலேயே மிகவும் அழகான பாம்பாக கருதப்படும் 'மை லவ் ' (MyLove) எனப் பெயரிடப்பட்டுள்ள இவ்வகைப் பாம்பு, பெரும்பாலும் நீர்வாழ் தாவரங்களில் மறைந்து வாழ்வதுடன் தீங்கு விளைவிக்காதவை; எப்போதாவது அரிதாக நிலப்பரப்பிற்கு வருகின்றன

பாம்புகளிலேயே மிகவும் அழகான பாம்பாக கருதப்படும் இப்பாம்பிற்கு 'மை லவ் ' (MyLove) எனப் பெயரிடப்பட்டுள்ளதாக மிருகக்காட்சிசாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பெரும்பாலும் நீர்வாழ் தாவரங்களில் மறைந்து வாழும் இந்த வானவில் பாம்புகள், தீங்கு விளைவிக்காதவை என்றும் எப்போதாவது அரிதாக நிலப்பரப்பிற்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சவூதி அரேபியா

## துப்பாக்கி சுடும் முதல் பெண் பயிற்சியாளர்



சவுதி அரேபியாவில், 'மோனா' எனப்படும் பெண் ஒருவர் துப்பாக்கி சுடும் பயிற்சியாளராகப் பணியாற்றி வருவது பலரது கவனத்தையும் ஈர்த்து வருகின்றது.

இவர் கடந்த 5 ஆண்டுகளாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் துப்பாக்கி சுடும் பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், தற்போது சவுதியில் உள்ள முன்னணிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளராகப் பணியாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்த மோனா, "ஆண்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் தொழில் இது என்பதால் ஆண்களிடம் இருந்து எதிர்ப்பு வரும் என எதிர்பார்த்ததாகவும், ஆனால் பழைமைவாத எண்ணம் நிறைந்த பெண்களிடம் இருந்தே அதிக எதிர்ப்பு வந்துள்ளதாகவும், எனினும் தன்னிடம் ஏராளமான பெண்கள் ஆர்வமுடன் வந்து பயிற்சி பெறுகிறார்கள்" எனவும் தெரிவித்தார்.

ரஷ்யா

## கணவனைக் கொன்று எலிக்கு விருந்து வைத்த பெண்



பெண்ணொருவர் தனது கணவனைக் கொன்று அவரது உடலைத் துண்டு துண்டுகளாக வெட்டி எலிக்கு உணவளித்த கொடூர சம்பவம் ரஷ்யாவில் இடம்பெற்றுள்ளது.

ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் வசித்து வரும் 37 வயதான மெரினா கோகல் என்ற பெண்ணே இவ்வாறு தனது கணவர் அலெக்சாண்டர் யுஷ்கோவை கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல ரப் பாடகரான அலெக்சாண்டர் வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும், இதனால் அவரைத் தண்டிக்க நினைத்தே இவ்வாறு செய்ததாகவும் மெரினா தெரிவித்துள்ளார்.

இருபதுக்கு - 20 உலகக் கிண்ணம்:

# இங்கிலாந்திடம் தோற்ற இலங்கை



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இங்கிலாந்துடனான குழு ஒன்று சுப்பர் 12 போட்டியில் இலங்கை தோற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணித்தலைவர் தசுன் ஷானக, இங்கிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, வனிடு ஹஸரங்கவிடம் 2, துஷ்மந்த சமீரவிடம் விக்கெட்டுகளை இழந்தபோதும், ஜொஸ் பட்லரின் ஆட்டமிழக்காத 101 (67), அணித்தலைவர் ஒய்ன் மோர்கனின் 40 (36) ஓட்டங்களோடு, 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஹஸரங்க 4-0-21-3, மஹேஷ் தீக்‌ஷன 4-0-13-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இதேவேளை, 164 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை சார்பாக ஹஸரங்க 34 (21), பானுக ராஜபக்‌ஷ 26 (18), தசுன் ஷானக 26 (25), சரித் அஸலங்க 21 (16) ஓட்டங்களைப் பெற்றனர்.

எனினும், எவரும் நிலைத்து நிற்காமல் குறிப்பிட்ட இடைவெளிகளில் அடில் ரஷீட் (2), கிறிஸ் ஜோர்டான் (2), லியாம் லிவிங்ஸ்டோன், மொயின் அலியிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 19 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 137 ஓட்டங்களையே பெற்று 26 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், ரஷீட் 4-0-19-2, மொயின் 3-0-15-2, ஜோர்டான் 4-0-19-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஜொஸ் படலர் தெரிவானார்.

இந்நிலையில், இன்று பிற்பகல் 3.30 மணிக்கு டுபாயில் நடைபெறவுள்ள போட்டியில் ஸ்கொட்லாந்தை நியூசிலாந்து எதிர்கொள்ளவுள்ளதுடன், அபு தாபியில் இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஆப்கானிஸ்தானை இந்தியா எதிர்கொள்ளவுள்ளது.






துறைநீலாவணையில் 4,000,000 ரூபாய் செலவில்


## கூடைப்பந்தாட்ட மைதானத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு

க. விஜயரெத்தினம்

அமரர் ஒய்வு பெற்ற அதிபர் சாமித்தம்பி சரவணமுத்துவின் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட திடலுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு மத்திய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், துறைநீலாவணை பொது விளையாட்டு மைதானத்தில் அன்னாரது புதல்வர் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரவணமுத்து - நவநீதன் தலைமையில் இடம்பெற்றது.

4,000,000 ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள விளையாட்டு அரங்குக்கான முதலாவது அடிக்கல்லை, சரவணமுத்துவின் பாரியார் நட்டு வைத்தார்.

இந்நிகழ்வுக்கு முதன்மை அதிதியாக மட்டக்களப்பு மாவட்டத்தின் அரச அதிபர் கே. கருணாகரன், கௌரவ விருந்தினர்களாக கருவாஞ்சிகுடி பிரதேசசெயலாளர் திருமதி வில்வரெத்தினம் சிவப்பிரியா, மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் எந்திரி என். சிவலிங்கம், கிழக்கு மாகாண உதவிப் பிரதமசெயலாளர் ஜீ. பிரணவன், லகுகல பிரதேசசெயலாளர் ந.நவநீதராசா, கல்முனை வடக்குப் பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ் உட்பட பலர் கலந்துகொண்டதுடன், துறைநீலாவணைக் கிராமத்தின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலைகளின் அதிபர்கள், மத்திய விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## வொல்வ்ஸிடம் தோற்ற எவெர்ற்றன்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், வொல்வர்ஹம்ப்டன் வொண்டரேர்ஸின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோற்றது.

எவெர்ற்றன் சார்பாகப் பெறப்பட்ட கோலை அலெக்ஸ் இவோபி பெற்றதோடு, வொல்வ்ஸ் சார்பாக மக்ஸ் கில்மன், றாவுல் ஜிமென்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

## முகாமையாளர் நுனோவை நீக்கிய டொட்டென்ஹாம்



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர், தமது முகாமையாளரான நுனோ எஸ்பிறிட்டோ சன்டோவை நான்கு மாதங்களில் நீக்கியுள்ளது.


கடந்த ஏழு லீக் போட்டிகளில் ஐந்தில் டொட்டென்ஹாம் தோற்றமையையடுத்தே நுனோ நீக்கப்பட்டுள்ளார்.

புள்ளிகள் பட்டியலில் எட்டாவதாக டொட்டென்ஹாம் காணப்படுகிறது.

இவ்வாண்டு ஜூன் மாதத்தில் இரண்டாண்டு ஒப்பந்தத்தில் நுனோ நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், நுனோவை இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனின் முன்னாள் முகாமையாளர் அன்டோனியோ கொன்டே பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பார்சிலோனாவுக்கு திரும்ப விரும்பும் மெஸ்ஸி



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவுக்கு எதிர்காலத்தில் தொழில்நுட்ப பணிப்பாளர் ஒருவராகத் திரும்ப விரும்புவதாக, பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான லியனல் மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு ஒகஸ்ட் மாதத்திலேயே 20 ஆண்டுகளுக்குப் பின்னர் பார்சிலோனாவிலிருந்து 34 வயதான மெஸ்ஸி விலகியிருந்தார்.

இதேவேளை, பார்சிலோனாவோ அல்லது வேறு எங்காவதோ வாய்ப்பிருந்தால் தொழில்நுட்பப் பணிப்பாளராகப் பணியாற்றப் போவதாகக் கூறியுள்ளார்.

LK Newspapers Viber Community

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 03 நவம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.